# பத்திரிக்கைச் செய்தி

எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021-ஐ முன்னிட்டு தேர்தல் பணியில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் கோவிட்-19 தடுப்பூசியினை செலுத்திக் கொள்ள வேண்டும் என தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வேலூர் மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள்), நுண்பார்வையாளர்கள் (Micro Observers), காவல் துறை அலுவலர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள், தன்னார்வலர்கள் ஆகிய அனைவரும் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி கோவிட்-19 தடுப்பூசியினை செலுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக வேலூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ளதோ அந்த இடத்திற்கு சென்று கோவிட்-19 தடுப்பூசியினை செலுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. ஒடுக்கத்தூர் சமூக சுகாதார மையம்
2. திருவலம் சமூக சுகாதார மையம்
3. கணியம்பாடி ஆரம்ப சுகாதார நிலையம் (தரம் உயர்த்தப்பட்டது)
4. வடுகந்தாங்கல் சமூக சுகாதார மையம்
5. குடியாத்தம் அரசு மருத்துவமனை
6. மேல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம்
7. ஊசூர் ஆரம்ப சுகாதார நிலையம் (தரம் உயர்த்தப்பட்டது)
8. அரசினர் பென்ட்லேண்ட் மருத்துவமனை, வேலூர்

9.கல்லப்பாடி சமூக சுகாதார மையம்

10.அரசினர் வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அடுக்கம்பாறை

11.சத்துவாச்சாரி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்

12.கொணவட்டம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்

13.தொரப்பாடி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்

14.தாராபடவேடு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்

தேர்தல் பணியில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏதேனும் ஒரு மையத்தில் 07.03.2021-ம் தேதிக்குள் கோவிட்-19 தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்திக் கொள்ள வேண்டும். முதல் டோஸ் செலுத்திய நாளிலிருந்து 28-நாட்களுக்கு பிறகு அதாவது ஏப்ரல்-4-ம் தேதியோ (அல்லது) 5-ம் தேதியோ இரண்டாவது டோஸ் தடுப்பூசியினை செலுத்திக் கொள்ள வேண்டும். மேற்படி இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்தும் பணியானது வாக்குப்பதிவு நாளுக்கு முன்னதாக இருக்க வேண்டும்.

கோவிட்-19 தடுப்பூசி குறித்து அலுவலர்கள் எவ்வித அச்சமும் பயமும் கொள்ளத் தேவையில்லை. மாவட்டத்தில் உள்ள மாவட்ட நிலை அலுவலர்கள் அனைவரும் கோவிட்-19 தடுப்பூசியினை செலுத்தி கொண்டு ஆரோக்கியத்துடன் உள்ளதால், தேர்தல் பணியில் ஈடுபடும் அனைத்து அலுவலர்களும் மேற்குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இரண்டு டோஸ் கோவிட்-19 தடுப்பூசியினை செலுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள்: 03.03.2021

மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர்.